FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301666

1. District : திருச்சி மாவட்டம் PS: கண்டோன்மெண்ட் காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 18 முத.அ. எண் Date: 07/8/2026 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 05/8/26 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 13.30hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07/08/26 Time : நேரம் 07.00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் இணையவழி புகார் அனுப்பப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 23 km வடக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : இராகரம் பாளையம் VAO அலுவலகம் முகவரி மண்ணச்சநல்லூர் TK, திருச்சி-DT

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S/o இளங்கோவன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : தந்தை/கணவர் பெயர் இளங்கோவன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 22/2/2002 (d) Nationality : நாட்டினம் இந்தியா (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் பள்ளி மாணவர் (g) Address : 9/166, கீழ் அம்மாளி மேட்டம் இராகரம் வாணர், மண்ணச்சநல்லூர் TK திருச்சி DT. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. நடராஜன், VAO இராகரம் பாளையம் மண்ணச்சநல்லூர் TK. திருச்சி DT

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

E. MATHAVAN 7/8/26

07/08/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் F. Xavier Rani
Rank: நிலை Insp. of Police No. எண் .....
VAC, Trichy.

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07/08/26

கனம் மாவட்ட முதன்மை நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.18/2026-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 07.08.2026 காலை 07.00 மணியளவில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுகா, இராசாம்பாளையம், கீழுர் அம்மாசி கொட்டத்தை சேர்ந்த இளங்கோவன் மகன் திரு.மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தாலுகா, இராசாம்பாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.நந்தகுமார் மற்றும் புகார்தாரர் திரு.மணிகண்டன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. பின்னர், இன்று 07.08.2026 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.18/2026 சட்டப்பிரிவு 7 (a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் இ.மணிகண்டன், வயது 24 த/பெ.இளங்கோவன்(லேட்), 9/166, கீழுர் அம்மாசி கொட்டம், இராசாம்பாளையம், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சி மாவட்டம். பெறுநர் ஆய்வாளர் ஐயா அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், திருச்சி. ஐயா, நான், இராசாம்பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான், பால் வியாபாரம் செய்து வருகிறேன். எனது அப்பா இளங்கோவன் 2012 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். எனது தாத்தா பிச்சை 10.02.2026 அன்று இறந்துவிட்டார். எனது தாத்தா பிச்சை பெயரில் இராசாம்பாளையத்தில் 95 சென்ட் விவசாய நிலம் உள்ளது. மேற்படி நிலத்தினை எனது தாத்தா, என் அண்ணன் பூபதி பெயரிலும், என் பெயரிலும் உயில் எழுதி வைத்தார். மேற்படி நிலமானது 5 சர்வே எண்களுக்கு கட்டுப்பட்டதாகும். எங்களது தாத்தா எங்களது பெயரில் எழுதி வைத்த நிலத்திற்கு பட்டா பெற வேண்டி ஆன்லைனில் அப்ளை செய்தேன். அதன்படி 5 சர்வே எண்களில் 3 சர்வே எண்களுக்கு மட்டும் ஆன்லைனில் பட்டா பெயர் மாற்றமாகி வந்துவிட்டது. மற்ற 2 சர்வே எண்களான சர்வே எண்.26/18 மற்றும் 26/13 ஆகிய சர்வே எண்களுக்கு பட்டா மாறாமல் எனது தாத்தா பிச்சை பெயரில் இருந்தது. இது குறித்து போன மாதம் மூன்றாவது வாரத்தில் எங்கள் ஊர் வி.ஏ.ஓ நந்தகுமாரை அவரது அலுவலகத்தில் சென்று கேட்ட போது அவர் மீண்டும் மேற்படி 2 சர்வே எண்களுக்குரிய நிலத்தை ஆன்லைனில் அப்ளை செய்ய சொன்னார். அதன்படி நான், 31.07.2026 அன்று ஆன்லைனில் அப்ளை செய்தேன். நான், 05.08.2026 ஆம் தேதி மதியம் சுமார் 1.30 மணிக்கு இராசாம்பாளையம் சென்று அங்கு வி.ஏ.ஓவை சந்தித்து நான் ஆன்லைனில் அப்ளை

செய்ததை சொன்னேன், பிறகு என்னிடம் விஏஓ எனது தாத்தா பெயரில் உள்ள பட்டாவின் ஜெராக்சை கேட்டார். என்னிடம் கையில் இல்லை என்று சொன்னதற்கு, ஜெராக்ஸ் போட்டு கொண்டு வா என சொன்னார். நான் உடனே தாத்தா பெயரில் உள்ள பட்டாவை ஜெராக்ஸ் போட்டு கொண்டு போய் கொடுத்தேன். அவர் அதனை வாங்கி கொண்டு என்னிடம் ரூபாய் 3 ஆயிரம் கேட்டார், அதற்கு அவரிடம் நான், என்ன சார் கவர்மென்ட் பீஸா என கேட்டேன். அதெல்லாம் இல்லை எனக்கு தனியா கொடுக்கனும் என சொன்னார். அதற்கு நான், அவரிடம், சார் நானே பால் வியாபாரம் செஞ்சிகிட்டு இருக்கேன், பெருசா அதுல ஒன்னும் வருமானம் இல்ல, பணம் இல்லாம செஞ்சி கொடுங்க சார் என்று சொன்னதற்கு பணம் இல்லாம செய்ய முடியாதுப்பா, நீ பால் வியாபாரத்துல ஒன்னும் பெருசா வருமானம் இல்லங்கற அதனால் ஆயிரம் ரூபாய கொறச்சிகிட்டு 2 ஆயிரம் கொடுத்துடு இல்லாட்டி உனக்கு அந்த 2 சர்வே நெம்பருக்கு பட்டா வராது அப்புறம் அலையவுட்டுறுவேன் பார்த்துக்க என சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் சரிங்க சார் பணத்தை ரெடி பண்ணிட்டு வந்திடுறேன் என்று சொன்னேன். எனவே என்னிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சமாக பணம் கேட்ட இராசாம்பாளையம் வி.ஏ.ஓ நந்தகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxxx(E.Manikandan) 7/8/26 Sir, Submitted to the Hon'ble Principal District & Sessions Judge, Trichy. Received the report at 07.00 hrs. on 07/08/26 and made a confidential enquiry and registered a case in Trichy V&AC Cr.No.18/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.00 hrs. on 07/08/26. Sd.xxxx 07/08/26 (F.Xavier Rani), Inspector of Police, V&AC, Trichy.

07/08/26
(F. Xavier Rani)
Inspector of Police,
V&AC, Trichy.